# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India R. No. 62828/95

Regd. No. TN/Chief PMG - 156/2000 Licensed to Post without prepayment WPP No. 52

வேணு : 6 | டிசம்பர் 2000 | கானம் : 5





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


| வேணு : 6 | டிசம்பர் 2000 | கானம் : 5 |
|---|---|---|


### விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 61 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 43 | 8 |
| 5. | ஹரி நாமத்தின் மஹிமை | 11 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 31 | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 37 | 17 |
| 8. | வேதபாடசாலைகளின் இன்றைய நிலை - தொடர்ச்சி | 20 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 64 | 22 |
| 10. | ஸ்ரீ ஸதாஸிவ ப்ரும்மேந்த்ராள் - 1 | 25 |
| 11. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 28 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 30 |
| 13. | செய்திகள் | 32 |
| 14. | ஸ்ரீ செம்பொன்செய்கோவில் மஹாஸம்ப்ரோக்ஷணம் | 16a |
| 15. | காவளம்பாடி ஸ்ரீராஜகோபாலஸ்வாமி திருக்கோவில் மஹா ஸம்ப்ரோக்ஷணம் | 16f |

ஶ்ரீ ஹரி:

# ஶ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : அஸாவேரி தாளம் : ஆதி

*பல்லவி*

*ராஜகோபால பாஹிமாம் பாஹிமாம்*
*ஸஜ்ஜனபால ரக்ஷமாம் ரக்ஷமாம் (ராஜ)*

*சரணங்கள்*

*யுவராஜேந்த்ர ராஜகோபால*
*நவபூஷணாலங்கார ராஜகோபால*
*ஶிவப்ரஹ்மாதி ஸேவித ராஜகோபால*
*குவலயபீடஹர ராஜகோபால (ராஜ)*

*மதஶிகி பிஞ்சாலங்க்ருத ராஜகோபால*
*பதபங்கஜ ராஜகோபால*
*வேதஸந்நுத ராஜகோபால*
*வதனஸரோஜ ராஜகோபால (ராஜ)*

*கோபவேஷதர ராஜகோபால*
*பாபவிநாஶக ராஜகோபால*
*தாபரஹித ராஜகோபால*
*யக்ஷஶாபஹர ராஜகோபால (ராஜ)*

*நித்யாநந்த ராஜகோபால*
*ஆத்யந்தரஹித ராஜகோபால*
*வித்யாதரஸந்நுத ராஜகோபால*
*ஸத்யமுரளீதர ராஜகோபால (ராஜ)*


## மதுரமான ஞானியர் 61

நம் ஸ்வாமிகள் ஒரு ஸமயம், ஸ்ரீ நாராயணதீர்த்தர் அவர்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கையில், அவருடைய கீர்த்தனைகளில் மிகவும் ப்ரஸித்தமான ''க்ஷேமம் குரு கோபாலா'' என்ற பாடலை, ஸ்ரீ நாராயணதீர்த்தர் எந்த ஸமயத்தில் பாடினார் என்பதைப் பற்றிக் கூறினார். அது மிகவும் ரஸமாக இருந்ததால் அதை தங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று எழுதுகின்றேன்.

'வரகூரில் ஸ்ரீ நாராயணதீர்த்தர் இருந்து வரும் காலத்தில், அந்த ஊருக்கு அருகாமையிலுள்ள இரட்டைக்கோயில் என்னும் கிராமத்தில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் ஏழை. அரசாங்கத்திற்கு அவன் வரிப்பணம் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் அவனிடமோ பணமில்லை. அவன் என்ன செய்வது என யோசித்தான். கடைசியில் தன்னிடம் உள்ள ஒரு ஆட்டை விற்று அந்த பணத்தைக்கொண்டு அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய பணத்தை செலுத்திவிடலாம் என்று முடிவுசெய்தான்.

ஆட்டை விற்பதற்காக அதை ஓட்டிச் செல்கையில், வழியில் வந்த ஒரு மந்திரவாதி அந்த ஆட்டை தன்னிடம் கொடுத்து விடும்படி அந்த விவசாயியை மிரட்டினான். அதற்கு விவசாயி மறுத்து விடவே அந்த மந்திரவாதி அந்த ஆட்டிற்கு மந்திர ப்ரயோகம் செய்துவிட்டான். அதனால், அந்த ஆடு அங்கேயே மரித்துவிட்டது. மந்திரவாதியோ சென்றுவிட்டான். விவசாயியோ ஆடு மரித்து விட்டதை நினைத்தும், அரசாங்கத்திற்கு பணம் செலுத்த முடியாததால் தண்டனைக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பதை நினைத்தும், அவ்விடத்திலேயே அமர்ந்து அழலானான்.

அப்பொழுது எதிர்ச்சயாக ஸ்ரீ நாராயணதீர்த்தர் பல பாகவதர்களுடன் கூட நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டே அவ்வழியே வரலானார். அந்த விவசாயி துக்கத்தில் அழுது



கொண்டு இருப்பதையும், அவன் பக்கத்தில் ஒரு ஆடு மரித்துக் கிடப்பதையும் கண்டார். அவனிடம் அவர், ''உன் துக்கத்திற்கு காரணம் என்ன?'' என்று பரம கருணையுடன் வினவினார். அவன் தனது பரிதாபமான கதையைக் கூறினான். அதைக் கேட்ட ஸ்ரீ நாராயணதீர்த்தர் கருணையுடன் தனது கமண்டல தீர்த்தத்தை அந்த ம்ருத ஆட்டின் மேல் ப்ரோக்ஷித்து, ''க்ஷேமம் குரு கோபால, ஸந்ததம்'' என்ற கீர்த்தனையைப் பாடினார்.

ம்ருத சரீரத்திலேயும் ஜீவனத்தை ஊட்டும் அந்த க்ருஷ்ண கீர்த்தனத்தால் அந்த ஆடு உயிர் பெற்று எழுந்தது. அந்த ஆடு எழுந்ததோடு மட்டுமல்லாமல், துள்ளி ஓடி வந்து, ஸ்ரீ நாராயண தீர்த்தரை பலமுறை ப்ரதக்ஷிணம் செய்து, பலமுறை வந்தனம் செய்தது. இதைக்கண்ட விவசாயி மேலும் பயந்துவிட்டான். அந்த ஆட்டை தன்னுடன் அழைத்து செல்ல அவன் விருப்பப்படவில்லை. பக்கத்திலுள்ள ஒருவரை அழைத்து, அந்த ஆட்டுக்கான விலையை கொடுக்கச்செய்து, அந்த விவசாயியை அனுப்பிவிட்டார் ஸ்ரீ நாராயண தீர்த்தர்.

அந்த ஆடோ, ஸ்வாமிகளை பின் தொடர்ந்து வரலாயிற்று. ஸ்வாமிகளும் அந்த ஆடு ஒரு யோக ப்ரஷ்ட ஜன்மம் என்று தெரிந்துகொண்டார். அதற்கு 'யோகீந்த்ரன்' என்றும் பெயர் சூட்டினார். பாகவதோத்தமர்களும் அந்த ஆட்டிற்கு சந்தன குங்குமம் இட்டு, மாலைகள் சுற்றி, பூஜை செய்தனர். சில காலம் வாழ்ந்து வந்த 'யோகீந்த்ரன்' என்ற நாமம் கொண்ட அந்த ஆடு, பிறகு க்ருஷ்ண சரணத்தை அடைந்தது' என்று ஸ்ரீ ஸ்வாமிகள் சொன்னார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

Our Website has been re-organised. Visit us at http://www.madhuramurali.org to know more about mission activities and satsang events.

The Spiritual Magazine “Madhura Murali” is also available on Web.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : வாஸ்து ஶாஸ்திரம் என்பது ஆகம ஶாஸ்திரத்தில் ஒரு பகுதியா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஆம். வாஸ்து ஶாஸ்திரம் ஆகம ஶாஸ்திரத்துள் ஒரு பகுதியே. ஶில்ப ஶாஸ்திரங்களிலும் வாஸ்துவின் கொள்கைகளுக்கு இடம் உண்டு. வாசி+தாது என்பதுதான் வாஸ்து என அழைக்கப்படுகின்றது.

*கேள்வி : கோவில்களைச் சுற்றி வீதிகள் அமைந்துள்ளதே! இதுவும் வாஸ்து ஶாஸ்திரத்தின் அடிப்படையில்தானோ?*

பதில் : ஒவ்வொரு ஊரிலும் அதன் மையத்திலோ அல்லது தென் கோடியிலோ, கோயில்களை அமைப்பது வழக்கம். கோயிலைக் கொண்டே குடியிருப்புகள் அமைந்துள்ளது. இதுவும் வாஸ்து ஶாஸ்திர மரபுபடியே அமைந்தது.

*கேள்வி : கர்ப்பதானம் என்றால் என்ன?*

பதில் : மூலமூர்த்தி அமைய இருக்கும் கர்ப்பக்ருஹத்தின் அடியில், ஒரு பாத்திரத்தை நிறுவுவார்கள். அது வெள்ளி, தங்கம், வெண்கலம் என்று எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அதை பூமிக்கு அடியில் புதைப்பது கர்ப்பதானம் எனப்படும். புண்ணிய தீர்த்தங்கள், புனித தலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மண், நவரத்தினம், நவதானியம் போன்றவைகள் இந்த குழியில் போடப்படும். எந்த ஸ்வாமியை ப்ரதிஷ்டை செய்யப் போகின்றோமோ, அவருடைய ஆயுதங்கள் உதாரணமாக, விஷ்ணு என்றால், விஷ்ணுவினுடைய பஞ்ச ஆயுதங்கள் கதை, கட்கம், ஶார்ங்கம், ஶங்கம், சக்கரம் இவைகளும் அதில் வைக்கப்படும்.

*கேள்வி : ஊரில் எந்த இடத்தில் மஹாவிஷ்ணு கோவில் அமைக்கப்படவேண்டும்?*

பதில் : ஊரின் மத்யஸ்தானத்துக்கு மேற்கே மஹாவிஷ்ணு கோயில் அமைக்கப்படவேண்டும். வடகிழக்கு ஈஶான மூலையில் பரமேஶ்வரன் கோயில் அமைக்கப்படவேண்டும். இதற்கு அருகே ஶப்தமாதர்களுக்குரிய கோயில் அமையவேண்டும். அதனால்தான்

துர்க்கைக்கு வடவாயில்செல்வி என்று பெயரும் உண்டு. விஷ்ணுகோவிலுக்கு அருகில் ஸுப்ரமணியருக்கு கோயில் அமைப்பதும் உண்டு. உக்கிர மூர்த்திகளை ஊருக்கு வெளியில்தான் ப்ரதிஷ்டை செய்வது வழக்கமாயிற்று. ஆனால், அவர்களுடன் அந்த தேவதைகளை ஶாந்தப்படுத்த தாயாருடன் சேர்ந்தே ப்ரதிஷ்டை செய்வதும் உண்டு.

*கேள்வி : ஆகமம் என்று எதற்கு பெயர்?*

பதில் : சிற்ப உருவில் தெய்வங்களை அமைப்பதும், முறைப்படி ப்ரதிஷ்டை செய்வதும், பூஜை செய்வதும், ஶாஸ்திரப்படி வகைப்படுத்தப்பட்டது. இவைகளுக்கு ஆகம ஶாஸ்திரம் என்று பெயர்.

*கேள்வி : ஆகமங்கள் மொத்தம் எத்தனை?*

பதில் : சைவ ஆகமங்கள் இருபத்து எட்டு, வைணவ ஆகமங்கள் இரண்டு. வைணவ ஆகமங்கள் வைகானசம் என்றும் பாஞ்சராத்ரம் என்றும் இருவகைப்படும். வைகானசம் என்பது வேதத்தை ஒட்டியது. பாஞ்சராத்ரம் என்பது வேதத்தை ஒட்டாமல் தனி வழியாக அமைந்தது. ஶாக்த ஆகமங்கள் தேவி பூஜையை ஒட்டியது. இவை வங்காளம், ஒரிஸா போன்ற தேசங்களை சேர்ந்தவையாக இருந்தன. இவைகளுக்கு வாமாச்சாரம் என்ற பெயரும் உண்டு.

*கேள்வி : கோயில்களில் மூர்த்திக்கு எப்படி ஸான்னித்யம் உண்டாகும்?*

பதில் : வேதம் ஆறு அங்கங்களை உடையது. கோயிலுக்கும் ஆறு அங்கங்கள் ப்ரதானமானவை. அதிஷ்டானம், பித்தி, பிரஸ்தாரம், பீவம், சிகரம், ஸ்தூபி ஆகியவைகளாகும். இந்த ஆறு அமைப்புகளும் ஒன்றுக்கொன்று பொருந்தும் அளவு கொண்டவை. இவை மாறக்கூடாது. மாறினால் ஸான்னித்யம் போய்விடும். மூர்த்தங்களை செய்ய ஆரம்பிக்கும்பொழுது மெழுகு வார்ப்பது, மண்பிடிப்பது, வார்ப்பு செய்வது போன்றவைகள் எல்லாம் மந்திர கோஷத்துடன் (அதாவது மந்திரங்களைக் கேட்டுக் கொண்டேதான்) செய்யவேண்டும். அப்பொழுதுதான் பிம்பமூர்த்தி மந்திரமூர்த்தியாக மாறும். ஸான்னித்யம் பக்தியினாலும் மந்திரங்களாலும்தான் ஏற்படும். மந்திரத்தினால் ஆவாஹனம் ஆகாத மூர்த்தி உயிரில்லாதது ஆகும்.

# வேத கதைகள் - 43

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஸ ஸாஸ்த்ரிகள்

## ஏழ்மை விலக வழி

முன்பு ஒரு ஸமயம், தேவர்கள் ஸர்வசரு என்ற ஒரு இடத்தில் ஒரு ஸத்ர யாகத்தை அனுஷ்டித்தனர். தேவர்கள் அந்த ஸத்ர யாகத்தை அனுஷ்டித்தும், ஏழ்மைக்கு காரணமான தங்கள் பாபத்தை போக்கடிக்க முடியவில்லை. பாபம் குறையாத அந்த தேவர்களை அற்புதர் என்ற பெயருள்ள ஒரு முனிவர் காணவந்தார். அவர் கத்ரு என்று பெயருள்ளவளின் பிள்ளை. பாம்பு உருவம் உள்ளவர். மந்திரங்களைக் கண்டுபிடித்தவர். ''ஓ, தேவர்களே! ஹோதாவின் வேதமான ரிக்வேதத்தில் கூறப்பட்ட ஒரு கர்மாவானது உங்களால் செய்யப்படவில்லை. ஆதலால்தான் உங்களுக்கு பாபம் குறையவில்லை. அந்தக் காரியத்தை உங்களுக்காக நான் அனுஷ்டிக்கிறேன். அதன் பிறகு பாபத்தை நீங்கள் போக்கடிப்பீர்கள்'' என்று அவர் கூறினார்.

இந்த முனிவரின் சொல்லைக் கேட்டு தேவர்கள் ஒப்புக் கொண்டனர். அற்புதர், தேவர்களின் ஸத்ர யாகத்தில் தினம்தோறும் மத்யான்னகாலத்தில் மட்டும் உற்சாகம் உள்ளவராக வந்தார். அவ்வாறு வந்து ஸோமலதையை நசுக்குவதற்காக கொண்டு வரப்பட்ட கற்களை ஒரு ஸூக்தத்தால் துதித்தார். அந்த பாம்பு உருவமுள்ள அற்புதர், எந்த வழியாக வந்தாரோ, அதாவது எந்த புற்றிலிருந்து வந்தாரோ அந்த இடமானது, அற்புதா உதாஸர்பணீ என்ற பெயருடன் கூடிய ஒரு வழியாக, இன்றும் இருக்கிறது.

கற்களால் ஸோம லதையை நசுக்குவதற்காக பாம்பு உருவமுள்ள அற்புதர் வந்தபொழுது அவருடைய விஷப்பார்வையால் பார்க்கப்பட்ட ஸோமலதையானது தானும் விஷமுள்ளதாக ஆகி அருகில் உள்ள தேவர்களை மயக்கமடையச் செய்தது. அப்பொழுது தேவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசித்து, பாம்பு உருவமுள்ள இந்த அற்புதர் ஸோமலதையை விஷப் பார்வையால் பார்க்கிறார். அதனால்தான் நமக்கு துன்பம் ஏற்படுகிறது. அதைப்

போக்குவதற்காக ஒரு துணியால் அவர் கண்ணைக் கட்டி அவர் பார்வையை மறைப்போம் என்று தீர்மானித்து அவ்விதமே செய்தனர். தேவர்களால் இவ்விதம் செய்யப்பட்டதால் இன்றும் ஸோம யாகத்தில் க்ராவஸ்துதௌ ரித்விக்கின் கண்ணை கட்டி ஸோம லதையை நசுக்குவதற்கான கற்களை துதிக்கின்றனர்.

தேவர்கள் மறுபடியும் யாகம் செய்தனர். முன்பு போல், அற்புதர் பார்வையினால் அடையப்பட்ட விஷம் அப்பொழுதும் இருந்ததால் தேவர்களை மறுபடியும் மயங்கச் செய்தது. பிறகு தேவர்கள் மீண்டும் ஆலோசித்தனர். த்ருஷ்டியினால் ஏற்பட்ட விஷம் குறைந்தாலும் பாம்பு உருவமுள்ள இந்த அற்புதர் தன்னைச் சார்ந்த ஒரு மந்திரத்தால் கற்களைத் துதிக்கிறார். மந்திரம் அவரைச் சார்ந்ததாக இருப்பதால் மந்திரத்திலும் விஷம் உள்ளது. ஆதலால், மந்திரத்தில் உள்ள விஷத்தை போக்குவதற்காக அற்புத முனிவரால் கூறப்பட்ட மந்திரங்களோடு, ''ஆப்யாயஸ்வ ஸமேதுதே'' என்ற மந்த்ரத்தை சேர்த்துக்கொள்வோம் என்று தீர்மானித்து அவ்விதமே செய்தனர்.

அதனால் ஸோம லதையானது யாரையும் மயக்கவில்லை. இவ்விதம் செய்ததால் தேவர்கள் ஏழ்மைக்குக் காரணமான பாபத்தை விலக்கினர். தேவர்கள் பாபத்தை விலக்கியதை அனுஸரித்து அற்புதரைச் சார்ந்த பாம்புகளும் தங்களிடம் உள்ள பாபங்களையும் விலக்கின. அந்த பாம்புகள் பாபங்கள் விலகியதால் நலிவு அடைந்த பழைய தோலை உரித்து புதுத் தோலுடன் செல்கின்றன. இந்த வரலாற்றை அறிந்தவனுக்கு எல்லா பாபங்களும் விலகும்.

இந்த உபாக்யானத்தால் ஒரு உண்மை நமக்கு நன்கு புலப்படுகிறது. இங்கு அற்புதரால் ஏற்பட்ட விஷத்தை, (ஆப்யாயஸ்வ ஸமேதுதே என்ற) மந்திரமானது போக்கியதாக கூறப்பட்டுள்ளது. ஹாலாஹலம் என்ற விஷமானது தேவர்கள் பாற்கடலை கடையும் பொழுது தோன்றியதும் தேவர்கள் வேண்டியதால் அந்த விஷத்தை தான் அருந்தி பரமேச்வரன் தேவர்களின் பயத்தை போக்கினார் என்று புராணங்கள் கூறுகின்றன.

இந்தக் கதையில், அற்புதர் என்ற பாம்பு உருவமுள்ள முனிவரிடமிருந்து விஷம் வந்தது. பாற்கடலை கடையும்பொழுது

வாசுகி என்ற பாம்பினிடமிருந்துதான் விஷம் தோன்றியது. ஸோமன் என்றால் உமாதேவியுடன் கூடிய பரமேஶ்வரன் என்று பொருள். அங்கு வாசுகியின் விஷத்தை ஸோமன் தான் போக்கடித்தான். இங்கும் ஸோம என்ற பதமுள்ள மந்திரம்தான் பாம்பு உருவமுள்ள முனிவரின் விஷத்தை போக்கியது. ஆதலால் ஹாலாஹல விஷத்தின் தோற்றத்திற்கு இந்த கதை மூலமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. ■

*With best compliments from*

**RISHAB ENTERPRISES**

2, City Centre,
39, Tirumalaipillai Road,
T. Nagar, Chennai - 600 017
✆ 823 0079, 823 2968

*Authorised Dealers*

**KIRLOSKAR COPELAND LTD.**

# ஹரி நாமத்தின் மஹிமை

- பாலாஜி

ஸூரஸேனன் என்ற ஒரு அரசன் வாழ்ந்து வந்தான். அவனுடைய ராஜ்யம் செல்வ செழிப்புடன் இருந்து வந்தது. ஒரு ஸமயம் அந்த அரசனுக்கு மோக்ஷத்தை அடைவதற்கான வழி என்ன என்று தெரிந்து கொள்ள ஆசையாக இருந்தது. ஆகவே ஒரு ப்ராஹ்மணரை அழைத்து, ''மோக்ஷமடைவதற்கான உபாயம் என்ன?'' என்று விசாரித்தான். அதற்கு அந்த ப்ராஹ்மணரோ, ''கர்மானுஷ்டானம் செய்தால் மோக்ஷம் சித்திக்கும் என பலர் கூறுவார்கள். ஆனால் உண்மையில் கர்மானுஷ்டானங்கள் ஸ்வர்க்கத்தை மட்டுமே தரக்கூடியது. ஹரி நாமஸங்கீர்த்தனமே மோக்ஷத்தை தர வல்லது'' என்று உபதேசித்ததோடு மட்டுமல்லாமல் அந்த ராஜாவைப் பார்த்து, ''ஸகல கர்மானுஷ்டானங்களையும் விட்டு, நாமஸங்கீர்த்தனம் மட்டும் செய்து கொண்டு வா'' என்று தைர்யமாக உபதேசம் செய்தார்.

அந்த அரசனும் ப்ராஹ்மணருடைய வார்த்தையை நம்பி கர்மாவை விட்டு ஹரி நாமஸங்கீர்த்தனம் மட்டுமே செய்து வந்தான். இதனால் அரசனுக்கு நாம அபசாரம் ஏற்பட்டது. அந்திம காலத்தில் யமதூதர்கள் அவனை பிடித்துச் சென்றனர். யமலோகம் செல்லும் வழி எல்லாமும் நாமகீர்த்தனமே செய்துகொண்டு சென்றான். அவனைக் கண்ட யமதர்மராஜா, ''நீ ஏன் கர்மானுஷ்டானங்களை விட்டாய்'' என்று கேள்வி கேட்டான். அதற்கும் அந்த ராஜா பதிலளிக்காமல் நாமஸங்கீர்த்தனமே செய்து வந்தான்.

யம தர்மராஜன், யமலோகத்தில் பலபேர்களை காண்பித்து, ''இவர்கள் கர்மானுஷ்டானங்களை விட்டதாலேயே நரக வேதனை அனுபவிக்கிறார்கள்'' என்று கூறினான். மேலும், ''ஆனால் நீ ஹரி நாமஸங்கீர்த்தனம் செய்து வந்திருப்பதால் உன்னை யமலோகத்தில் போட முடியாது. அதனால் நீ எங்கேயாவது ஓடி போ'' என்று கூறி விரட்டி விட்டான். உடனே விஷ்ணு தூதர்கள் அவனை அழைத்து விமானத்தில் ஏற்றி, வைகுண்டத்தின் அருகாமையில் அழைத்துச் சென்றனர். அந்த லோகத்தின் அருகாமையில் வந்ததும், நாம

ஸங்கீர்த்தனத்திற்கு ஸமமான தர்மமில்லை என்ற ஞானத்தை அடைந்து உச்ச ஸ்வரத்தில் ஹரி நாமகீர்த்தனம் செய்தான்.

ஸ்ரீமன் நாராயணன் ப்ரஸன்னமாகி, ''பயப்படாதே, பயப்படாதே!'' என்று அபயம் தந்தார். ''நீ செய்த நாமகீர்த்தன பலத்தால், நீ செய்து வந்த பாபங்கள் எல்லாம் நீங்கி விட்டது'' என்று கூறினார். மேலும் ''நாமகீர்த்தனம் செய்கின்றோம் என்ற தைர்யத்தில் கர்மானுஷ்டானங்களை விட்டுவிட்டதால் பூலோகத்தில் இன்னும் ஒரு ஜன்மம் எடுத்து நாமகீர்த்தனம் செய்து வைகுண்ட பதவியை அடைவாயாக'' என்று அனுக்ரஹித்தார். அதுபோலவே ஸூரஸேனனும் மறுபிறவி எடுத்து அனவரதமும் நாமகீர்த்தனத்தினால் நாமாபசாரத்தை போக்கிக்கொண்டு வைகுண்ட பதவியை அடைந்தான். இந்த சரித்திரமானது ப்ரஹ்மாண்ட புராணத்தில் உள்ளது.

*With best compliments from*

AUDCO INDIA LIMITED

CHENNAI

# எந்தரோ மஹானுபாவுலு - 31

லோகப்ரியனான நிமாயி பண்டிதனின் பத்தினி லக்ஷ்மீதேவி ஸர்வ நற்குணங்கள் பொருந்தியவள். பதியை ப்ராணனாக மதித்து வந்தாள். மாமியாரைத் தாய்க்கும் மேலாக மதித்தாள். பெயர் மாத்திரம் லக்ஷ்மீ இல்லை. ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியாகவே திகழ்ந்தாள். நிமாயி, கிழக்கு வங்காள யாத்திரைச் செல்லும்பொழுது தன் அன்னையின் சொல்படி லக்ஷ்மியை அவளது தந்தையின் க்ருஹத்தில் விட்டுச் செல்லும்போது அவள், நிமாயியின் சரணங்களில் விழுந்து அழ ஆரம்பித்தாள்.

நிமாயி அவளிடம், ''இப்படி துக்கப்பட்டு அழுவதற்கு என்ன இருக்கிறது. நான் யாத்திரை முடிந்து வரும் வரை நீ இங்கு இரு. பத்து இருபது தினங்களில் திரும்பிவந்து விடுவேனே. இதற்காக யாராவது அழுவார்களா என்ன?'' என்று ஸமாதானப்படுத்திவிட்டு கிளம்பினான். பதியின் வ்யோகத்தால் லக்ஷ்மீதேவி ஒவ்வொரு நாளும் மிகவும் துக்கித்துத் தவித்தாள். அவளுக்கு உலகமே சூன்யமாகிவிட்டது. கணவனைவிட அவளுக்கு ப்ரஸன்னத்தை அளிக்கும் பொருளோ, மனிதரோ அவளுக்கு உலகில் ஏதுமே கிடையாது. இப்படி விரஹத்தினால் அவளுக்கு அன்னபானம் வெறுத்தது. ஆகாரமில்லாமல் இருந்ததால் ஜீரணசக்தி குறைந்து ஜ்வரம் ஏற்பட்டது.

நிமாயி எதிர்பார்த்ததைவிட வங்காள யாத்திரையில் நிறைய நாட்கள் கடந்துவிட்டன. கணவனின் பிரிவாற்றாமையை தாளமுடியாமல் லக்ஷ்மீதேவி பதியின் சரணங்களை மனதில் த்யானித்துக்கொண்டே தனது பௌதீக ஶரீரத்தை த்யாகம் செய்தாள். இந்த பூலோகத்தை விட்டு பதிவ்ரதைகள் வாழும் புண்ய லோகத்தை அடைந்தாள்.

நிமாயிக்கு யாத்திரையிலேயே பல மாதங்கள் கழிந்தன. திடீரென அவனுக்கு வீட்டு நினைவு வந்தது. தனது வீட்டில் ஏதோ அஸம்பாவிதம் ஏற்பட்டுள்ளது என அவனது உள்ளுணர்வு கூறியது. உடனே தன் ஶிஷ்யர்களை தன்னுடன் நவத்வீபத்திற்கு புறப்படுமாறு சொன்னான். சில தினங்களில் நவத்வீபத்தை வந்தடைந்தனர்.

நிமாயியின் வரவு பற்றிய சேதி மின்னல் போல் பரவியது. அனைவரும் நிமாயியை சந்திக்க அவனது வீட்டிற்கு வந்தனர். முதன்முதலில் நிமாயி தனது தாயை வந்தனம் செய்து துக்கம் நிரம்பிய தாயின் முகத்தைப் பார்த்து, ''அம்மா எல்லோரும் சுகம்தானே? நானே எதிர்பார்க்காமல் எனது யாத்திரை நெடு நாட்களாக நீண்டுவிட்டது. உனக்கு ஒன்றும் சிரமமில்லையே? என்று கேட்டான்.

அன்னை அழுதுகொண்டே லக்ஷ்மீதேவியின் மரணத்தைப் பற்றிக் கூறினாள். நிமாயியின் கண்களில் கண்ணீர் பெருகியது. மெதுவாக அன்னையிடம், ''அம்மா, விதியின் விளைவை யாரால் மாற்ற முடியும்! நம் பாக்யப்படிதான் எல்லாம் நடக்கும். உனக்கும் உன் மருமகளுக்கும் உள்ள தொடர்பு இவ்வளவு தான்'' என்றான்.

அன்னையோ அழுதுகொண்டே இருந்தாள். நிமாயி, ''அம்மா இப்படி அழுதால் உன் மருமகள் திரும்பி வரப்போகிறாளா என்ன? அவள் திரும்பி வருவதற்காகச் செல்லவில்லை. தைர்யத்துடன் மேற்கொண்டு ஆவதைக் கவனி'' என்று ஸமாதானப்படுத்தினார். புத்ரனின் ஸமாதான வார்த்தைகளால் தேறிய அன்னை, நிமாயிக்கு ஸ்நான ஆகார வசதிகளைக் கவனிக்க மெதுவாக எழுந்தாள். நிமாயியும் கிழக்கு வங்காள யாத்திரை பற்றிய விபரங்களை தனது நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான். பிறகு பாடசாலைக்குச் சென்று போதிக்க ஆரம்பித்தான்.

நிமாயி பண்டிதரின் காலத்தில் பாரதத்தில் நவத்வீபம் மிகப்பெரிய வித்யாகேந்திரமாக புகழ் பெற்றிருந்தது. காஶ்மீரத்தைச் சேர்ந்த கேஶவ முராரி என்ற பண்டிதர் மிகப் பெரிய வித்வான். ஸரஸ்வதியின் உபாஸகரானதால் எந்த ஸபையிலும் தோல்வியே காணாதவர். எனவே ஆங்காங்கு திக்விஜயம் செய்து எல்லோரையும் வாதத்தில் வென்று வெற்றி வாகை சூடி மிகவும் புகழுடன் கர்வத்துடனும் இருந்தார். அவர் நவத்வீபத்துக்கு திக்விஜயம் செய்தபோது அங்குள்ள பண்டிதர்கள் மனம் கலங்கி நடுங்கினார்கள். இவரை எப்படி வாதத்தில் ஸமாளிப்பது என்று பயந்தார்கள்.

நிமாயி அவரது வரவைப் பற்றி சிறிதும் கலங்கவில்லை. மாறாக அவர் எங்கு தினம் ஸஞ்சரிக்கிறார், எப்பொழுது கங்கைக்

கரைக்கு வருகிறார் என்று விசாரித்துக்கொண்டு அதே இடத்திற்கு தனது வித்யார்த்திகளுடன் சென்று ஶாஸ்த்ரார்த்த பாடம் நடத்த ஆரம்பித்தார். மாலைப்பொழுதும் கங்கையின் சலசலப்பும் சேர்ந்து மனோஹரமான சூழ்நிலையாக இருந்தது. திக்விஜயீ பண்டிதரும் தனது அந்தரங்க சிஷ்யர்களுடன் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் நிமாயி அவரை வரவேற்று அமரச் சொன்னார். கேஶவ முராரி நிமாயியிடம், ''நீ எந்த பாடசாலையில் படிக்கிறாய்'' என வினவினார். உடனே ஒரு வித்யார்த்தி எழுந்திருந்து, அவரிடம், ''இவர்தான் இங்குள்ள புகழ்பெற்ற நிமாயி பண்டிதர். எங்களது அத்யாபகர்'' என்றதும், கேஶவமுராரி, ''ஓஹோ, நீதானா அந்த புகழ் பெற்ற வ்யாகரண பண்டிதர். எங்கே ஒரு வ்யாகரண பங்க்தி சொல் பார்ப்போம்'' என்றார்.

நிமாயி, கைகளை கூப்பிக்கொண்டு, ''ஏதோ உங்களைப் போன்ற குருவின் க்ருபை எனக்குத் துளி உள்ளது. அவ்வளவுதான். உங்களது சிஷ்யனுக்கு சிஷ்யனாக இருக்கும் தகுதி கூட எனக்குக் கிடையாது. நீங்கள்தான் மிகவும் புகழ்பெற்ற கவி. இங்குள்ள எனது மாணவர்கள் உங்களது கவித்துவத்தை ரஸிக்க ஆவலாக உள்ளனர். தயவு செய்து நீங்களே ஒரு கவிதை சொல்லுங்களேன்'' என்று வினயத்துடன் சொன்னார். திக்விஜய பண்டிதரான கேஶவமுராரி உடனே கர்வத்துடன், சரி உங்களுடைய விருப்பத்தைச் சொல்லுங்கள். எந்த விஷயத்தில் கவிதை வேண்டும்'' எனக்கேட்டார். நிமாயி, ''பாகீரதியைப் பற்றியே கூறுங்களேன். காதுகளும் பவித்ரமாகும். காவ்ய ரஸமும் சுவைக்க முடியும் என்றார்''.

உடனே கேசவமுராரி, கங்கையின் ப்ரவாஹத்துக்கு இணையாக மடமடவென்று ஶ்லோகங்களைக் கூறலானார். அனைத்தும் புதியவை. அந்த க்ஷணமே இயற்றப்பட்டவை. ஒரு இடத்திலும் தடங்காமல் ஒரு ப்ராயாசையும் படாமல் ஸுலபமாக பேசுவது போல் கவிதைகளை மொழிந்தார். அனைவரும் ஆச்சரியத்துடன் கண்கொட்டாமல் அவரையே விழுங்குவதுபோல் பார்த்துக் கொண்டு இருந்தனர். ஒரு மணி நேரத்தில் நூற்றுக்கும் அதிகமான ஶ்லோகங்களைக் கூறி விட்டு அமைதியாக அமர்ந்திருந்தார்.

அமைதியான சூழ்நிலையை கலைக்கும் வண்ணம் நிமாயியே கம்பீரமாக பேசலானார். ''மஹாராஜ்! தங்களது அம்ருதமான

வாணியைக் கேட்டு நாங்கள் தன்யர்களானோம். இப்படிப்பட்ட அபூர்வ காவ்யத்தையோ அல்லது கவியையோ நாங்கள் கேட்டதும் இல்லை, பார்த்ததும் இல்லை. இந்த காவ்யத்தின் உள்ளர்த்தங்களை உங்களால்தான் அறிய முடியும். எங்களுக்கு இதைப் புரிந்து கொள்ளும் திறனும் இல்லை. எனவே ஏதாவது ஒரு ச்லோகத்தின் குண தோஷங்களைப் பற்றி நீங்கள் சொல்லுங்கள்'' என்றதும், கேஶவமுராரி சிரித்துக்கொண்டே, ''என் கவிதையில் தோஷமே இராது. எந்த ஶ்லோகத்துக்கு வ்யாக்யானம் வேண்டும் என்று சொல். கூறுகிறேன்'' என்று இடக்காக கூறினார்.

நாமோ புதிய கவிதையை மடமடவென்று கூறி இருக்கிறோம். இதிலிருந்து ஒரு ஶ்லோகத்தை இவன் எப்படி நினைவுபடுத்திக் கேட்பான். இத்துடன் இந்த விஷயம் முடிந்தது என்று தான் அவர் நினைத்தார். ஆனால் நிமாயி என்ன சாதாரண மனிதனா என்ன? தனது மதுரமான கோமளமான குரலில் ''மஹத்வம் கங்காயா:'' என்று ஆரம்பிக்கும் ஸ்லோகத்தை முழுக்க கூறி இதற்குத் தான் அர்த்தம் சொல்லுங்களேன் என்றார்.

திக்விஜயீ பண்டிதருக்கு முகம் வெளுத்துவிட்டது. நாம் மடமடவென்று சொன்ன ஶ்லோகக் குவியல்களின் நடுவிலிருந்து ஒரு ஶ்லோகத்தை இப்படி மனப்பாடமாக ஒருத்தன் சொல்கிறானே என்று ஆச்சரியம் அடைந்து, ''நீங்கள் மிகவும் சதுரர். நான் எப்படி வேகமாக கவிதை சொன்னேன். அதற்குள் மனப்பாடம் செய்து விட்டீர்களே'' என்றார். நிமாயி வினயமாக, ''எல்லாம் உங்கள் க்ருபை. நீங்கள் இந்த ஶ்லோகத்தின் குண தோஷங்களை பற்றிச் சொல்லுங்கள் என்றார். கேஶவ முராரி, ''இது அலங்கார விஷயம். நீயோ வ்யாகரண பண்டிதன். உனக்கு இதுபற்றி என்ன புரியும்'' என்றார். நிமாயி, ''நான் அலங்காரம் பற்றி அத்யயனம் பண்ணவில்லையே தவிர எனக்கு இந்த விஷயம் பற்றி பரிச்சயம் உண்டு. எனவே தாங்கள் கூறுங்கள்'' என்றார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை- 37

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ஒரு அழகான கிராமத்தில் தனஞ்ஜயன் என்று ஒருவர் வசித்து வந்தார். அந்த கிராமமும் இயற்கை வளம் நிரம்பிய ஒரு கிராமம் ஆகும். அந்த கிராமத்தில் உள்ள அனைவரும் செல்வ செழிப்புடனும் மிகவும் ஸந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தார்கள். தனஞ்சயன் என்பவர் வியாபாரம் செய்து வந்தார். பெரும்பாலும் அவருடைய வியாபாரங்கள் எல்லாம் நகரத்திலேயே இருந்து வந்ததால், அவர் தன் கிராமத்தில் தான் வசித்து வரும் வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, நகரத்தில் ஒரு வீடு எடுத்துக்கொண்டு அங்கு தங்கி வியாபாரம் செய்யலாம் என்று முடிவெடுத்தார். அதனால் தன்னுடைய கிராமத்தில் உள்ள வீட்டை ஒரு நல்ல நபராகப் பார்த்து வாடகைக்குவிட தீர்மானித்தார். அந்த ஊரில் வசித்து வந்த பூபதி என்பவருக்கு அந்த வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டார். நகரத்தில் வீடு எடுத்து தங்கி தனஞ்ஜயனும் அங்கு தன்னுடைய வியாபாரங்களை கவனித்து வந்தார்.

தனஞ்ஜயனின் வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்ட பூபதி, தோட்டத்தில் புஷ்ப செடிகளும், மரங்களும் நடுவதற்காக தோட்டத்தை தோண்டலானார். அப்பொழுது அவர் தோண்ட தோண்ட தன்னுடைய மண் வெட்டியானது ஏதோ உலோகத்தில் படும் சப்தம் கேட்டு ஆச்சர்யம் அடைந்தார். விடாமல் தோண்டிப் பார்க்கையில் கீழே பொற்காசுகள் நிரம்பிய பல குடங்களைக் கண்டார். அவைகளை எல்லாம் மெதுவாக ஒவ்வொன்றாக மேலே எடுத்தார். தன்னுடைய வீட்டில் அவைகளை எல்லாம் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு வீட்டின் சொந்தகாரரான தனஞ்ஜயனை தேடிச் சென்று அவரிடம் எல்லா விவரங்களையும் தெரிவித்தார்.

அவரோ, ''நானோ என் வீட்டை தங்களுக்கு வாடகைக்கு கொடுத்துவிட்டேன். அந்த வீட்டில் எது கிடைத்தாலும் அது தங்களையேச் சாரும்'' என்று கூறி அவைகளை எனக்குத் தர தேவையில்லை என்று கூறிவிட்டார். பூபதியோ, ''என்ன இருந்தாலும்



வீடு தங்களுடையதே. அதில் குடியிருக்க மட்டுமே எனக்கு உரிமம். அதில் உள்ள அத்தனை பொற்காசுகளும் தங்களுக்குத்தான் சொந்தம்'' என்று கூறி அவைகளை சீக்கிரம் வந்து தாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறிச் சென்றுவிட்டார். சில காலம் இப்படியே கழிந்தது.

திடீர் என்று ஒருநாள் தனஞ்ஜயன் பூபதியிடம் சென்று அந்த பொற்காசு நிறைந்த குடங்கள் எல்லாம் என்னைத்தான் சாரவேண்டும். அவைகளை கொடுத்துவிடு என்றார். பூபதியோ எப்பொழுது வீட்டை எனக்கு வாடகைக்கு விட்டுவிட்டாயோ, அப்பொழுதே அதில் உள்ள பொருள்கள் எல்லாம் என்னைத்தான் சாரும் என்று கூறி அவற்றைத் தர மறுத்துவிட்டார். வழக்கு பஞ்சாயத்திற்குச் சென்றது.

வழக்கு முழுவதையும் விசாரித்த பஞ்சாயத்து தலைவருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. முதலில் இருவரும் அந்த புதையல் தங்களைச் சாராதது என்று கூறி வந்தார்கள். இப்பொழுது மட்டும் இப்படி மாறி பேசுவதற்கு என்ன காரணம் என்று யோசித்தார். அவருக்கு விடை தெரியவில்லை. அவர் நீதிமான், நல்ல பக்தரும்கூட. அன்றிரவு இதற்கு என்ன காரணம் என்று இறைவனை வேண்டி படுக்கச்சென்றார்.

அன்று இரவு அவருடைய கனவில் இறைவன் தோன்றினான். அவர்கள் என்று அந்த புதையல் தங்களையேச் சாரும் என்று சண்டையிட ஆரம்பித்தார்களோ, அன்றுதான் கலியுகத்தில் ஆரம்பநாள் என்றும், போகப் போக இந்த யுகம் மிகவும் மோசம் அடையும் என்றும் இறைவன் கூறி மறைந்தான். அந்த பஞ்சாயத்து தலைவருக்கும் அவர்களிருவரும் இவ்வாறு மாறி மாறி பேசுவதன் காரணம் விளங்கலாயிற்று.

*With best compliments from*

**OMPLAS SYSTEMS**

Flat 81, Block I, Gokul Gardens,
182, Trunk Road, Porur, Chennai - 600 116

# "வேதபாடசாலைகளின் இன்றைய நிலை"

- தொடர்ச்சி

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ஒரு விஷயம் தவறு அல்லது சரி என்று தீர்மானிப்பதற்கு ஒரு ஆதாரம் வேண்டும். உலக விஷயங்களில் இது குற்றம் அல்லது குற்றமற்றது என்பதை தீர்மானிப்பதற்கு அந்த அந்த நாட்டிற்கும் ஒரு சட்டதிட்டங்கள் உண்டு. இந்த சட்ட திட்டங்களை அந்த அந்த தேசத்தை சேர்ந்த அறிஞர்கள் பலர் கூடி அந்த அந்த தேசத்தின் சூழ்நிலைக்கும், கலாச்சாரத்திற்கும் ஒத்து வரும் வகையில் அமைத்துள்ளனர். உலக சட்டதிட்டங்களை பொறுத்த வரையில் இது சரியே! இந்த சட்டதிட்டத்தை யார் யார் மீறி நடக்கின்றார்களோ அவர்கள் தண்டிக்கவும்படுகின்றார்கள். அந்த சட்டதிட்டங்களை காலத்திற்கு தகுந்தார் போல் மாற்றியும் கொள்கின்றனர்.

தெய்வம், பரமாத்மா ஸ்வரூபம், பரலோகங்கள், தேவர்கள், பாபம், புண்யம், இவை எல்லாம் வாக்கு, மனசு, கண்களுக்கு புலப்படாததாக இருக்கின்றது. இவைகள் இருப்பதாக நமக்கு வேதமே காண்பித்துக்கொடுக்கிறது. இவைகளை அடைய விரும்பும் ஒருவன், வேதம் காண்பித்து கொடுத்த வழியில் சென்றால்தான் அடைய முடியுமே தவிர, தன் மனம் போன போக்கில் போய் அடைய முடியாது. அத்யாத்மிக லாபத்தை அடைய, இவ்வுலக வாழ்க்கையிலும் சில நியமங்களை கடைப்பிடிப்பது அவசியமாய் உள்ளதால், வேதம் உலக வாழ்க்கையை பற்றியும் பேசுகிறது. மனிதப் பிறப்பே அத்யாத்மிக லாபத்தை அடைவதற்குத்தான் என்பது உண்மை. ஆதலால், வேதத்தில் உள்ள தர்மங்களும், சட்டதிட்டங்களும் அனைவருக்குமே பொருந்தும்.

வேதத்தில் ஶத்ருநாசங்களை பற்றி சொல்லி இருப்பதால், வேதம் இப்படி பேசலாமா என்று சிலர் கேள்வி கேட்பதுண்டு. ஹிம்சையால்தான், அஹிம்சையை ஸ்தாபிக்கமுடியும் என்பதுதான் வேதத்தின் கட்சி. உலகத்தில் சிவ பக்தியோ, ஹரி பக்தியோ, தேவி

பக்தியோ எந்த பக்தியாக இருந்தாலும் சரி அந்தந்த தெய்வங்களை காண்பித்து கொடுப்பது வேதம்தான். கர்மமார்க்கமோ, ஞானமார்க்கமோ, யோக மார்க்கமோ, பக்தி மார்க்கமோ எல்லாவற்றையும் நமக்கு காண்பித்து கொடுப்பது வேதம்தான். சிலது தர்மம் போல் தோன்றினாலும், அதர்மமாக இருக்கும். சிலது அதர்மம் போல் தோன்றினாலும் தர்மமாக இருக்கும். ஆதலால் தர்மத்தின் பாதை மிகவும் சூக்ஷ்மமானது. மேலும் இது சரி, இது தவறு என்பதற்கு ஒரு ஆதாரமான க்ரந்தம் தேவை. அந்த க்ரந்தமே வேதம். வேதம் அபௌருஷ்யமானதால், அது பக்ஷ, பாதமில்லாதது.

ஒருவருடைய குணநலன்களை போற்றும்பொழுது, அவர் வர்ணாஶ்ரம தர்மங்களை மிகவும் Strictஆக கடைப்பிடிப்பவரென்றும் ஆசார, அனுஷ்டானங்களில் இருந்து வழுவாதவர் என்பதையும் ஒரு குணமாக போற்றுகின்றோம். அதே ஸமயம் மற்றொருவரைப் பற்றி புகழும்பொழுது இவர் ஜாதி, மதம் என்று எந்த வித்தியாசமும் பார்க்காமல் பழகுவார் என்பதையும் ஒரு குணமாக புகழுகின்றோம். இவற்றில் இரண்டும் குணமாக இருக்க முடியாது. ஒன்று குணமாக இருந்தால், மற்றொன்று குணமாக இருக்க முடியாது அல்லவா.

(தொடரும்)

*With best compliments from*

**Reliable Engineering**

No. 1, Phase-4, Thiru-Vi-Ka Industrial Estate
(New Allotment Backside Tiny Sector)
Ekkattuthangal, Chennai - 600 097

(Manufacturers of Machined Engineering Components)

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 64

*சொல்லாது சொல்லி நீ சொல்லற நில் என்று*
*சும்மாவிருந்தாய் அருணாசலா* (தொடர்ச்சி)

1954ல் சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரிக்கு பெரிய பெரியவா விஜயம் செய்தபொழுது, பெரியவாளுக்கு எல்லோரும் ஸ்வாகத பத்ரம் (வரவேற்பு மடல்) வாசித்தனர். அப்பொழுது வாஸித்த அனைவரும் ஒவ்வொருவராக பேசும்பொழுது, ''பெரியவா எங்களை சிகை வைத்துக்கொள்ளச் சொன்னார். நாங்கள் வைத்துக் கொள்ளவில்லை. குழந்தைகளை ஒரு வருஷம் பள்ளிக்கூடம் நிறுத்திவிட்டு வேத அத்யயனம் செய்வதற்கு அனுப்பச் சொன்னார். நாங்கள் கேட்கவில்லை'' இப்படியாக பலவிதமாக பேசினர்.

பெரியவா கடைசியாக பேசும்பொழுது, ''எல்லோரும் எனக்கு Grandஆக பெரிய வரவேற்பு கொடுத்து, கோலாகலமான ஏற்பாடுகள் எல்லாம் பண்ணியிருக்கேள். ஆனா, ஸ்வாகதபத்ரம் படிக்கும்பொழுது எல்லாரும், பெரியவா சிகை வைச்சுக்க சொன்னா, கேட்கவில்லை. சிஷ்டாசாரத்தோட இருக்க சொன்னா. கேட்கவில்லை. வேத அத்யயனம் பண்ண சொன்னா. நாங்க பண்ணவில்லை என்று பலவிதமா பேசி குறைபட்டுக்கறேள். இவ்வளவு வரவேற்பு கொடுத்துட்டு, நீங்க வருத்தப்படறது எனக்கு வருத்தமாயிருக்கிறது. அதனால் நான் என்ன சொல்றேன்னா, உங்கள் எல்லோரையும் திருத்தும் அளவுக்கு என்னிடம் தபஸ் இல்லை என்று சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன்'' என்று சொன்னார். பழியை நான் என் பக்கம் போட்டுக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டார். தபஸ் இருந்தும் பெரியவா பரமவினயமாக தன் மேல் மற்றவரின் குற்றத்தை போட்டுக்கொண்டார். தபஸ் இருந்து உபதேஸம் பண்ணினாதான் பலிக்கும்.

'சொல்லாது சொல்லி நீ' இங்கு உபதேசம் பண்ணுகிறவர் மனோ மௌனத்தை கடைபிடித்தவராய் இருத்தல்வேண்டும். அந்த உபதேசத்தையும் வாய் திறந்து சொல்ல வேண்டியது இல்லை.

பகவான் ரமண மஹரிஷிகளிடம் ஒருவர் வந்து, தனக்கு ஏதாவது உபதேசம் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருந்தார். அவரோ அதை காதில் போட்டுக்கொள்வதாகவே இல்லை. கடைசியில் அந்த பக்தர் பகவானுக்கு மிரட்டும் **பா**வனையில் ஒரு கடிதம் எழுதினார். ''நான் என்ன ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு உள்ளேன் என்றால், எவ்வளவு ஜன்மங்கள் எடுத்தாலும் உங்களையே குருவாக அடைவது என்று வைத்துள்ளேன். நீங்களோ என் விஷயத்தில் வாய் திறந்து பேசுவதாய் இல்லை. இதுபோல் நீங்கள் அனுக்ரஹம் செய்யாமல் இருந்தால் எனக்கு இன்னுமொரு பிறப்பு வரும். இன்னொரு ஜன்மா நான் எடுத்தால், எனக்கு உபதேசம் பண்ணும் பொருட்டு நீங்கள் பிறக்க வேண்டி வரும். ஆதலால் நீங்கள் பிறக்காமலிருக்க ஆசைப்பட்டால், எனக்கு உபதேசம் செய்து அனுக்ரஹிக்க வேணும்'' என்று எழுதிக் கொடுத்தார்.

ரமண மஹரிஷிகள் அதை படித்துப் பார்த்துவிட்டு அவரிடம், ''உனக்கு இந்த ஜன்மாவில் மோக்ஷம் இல்லை எனில், இங்கு வந்திருப்பாயோ'' என்றார். மேலும், ''எந்த தெய்வீக சக்தி உன்னை இங்கு கூட்டி வந்து வைத்ததோ, அதுவே மேலும் நடத்திச் செல்லும். எதற்கும் கவலைப்படாமலிருக்கவும்'' என்று சொன்னார். ஶரணாகதி பண்ணிவிட்டால், குரு இது பண்ணவில்லை, அது பண்ணவில்லை என்று சொல்வது சரியல்ல. குருவிற்கு என்ன செய்யவேண்டும் எப்பொழுது செய்யவேண்டும் என்று தெரியும். ஆதலால், நிச்சிந்தையாகவும், ஸதா ஸந்தோஷமாகவும் இருப்பதே சரி.

'சொல்லாது சொல்லி நீ' இந்த உபதேசத்தை வாய் திறந்து சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பகவான் ரமண மஹரிஷிகளின் ஸன்னிதானத்தில் நித்யப்படி காலையில் எல்லோரும் விசாரம், தியானம் பண்ணுவது வழக்கம், அதிகாலையில் பகவான் எழுந்து, காலை கடன்கள் முடித்து, ஸ்நானம் செய்து, தரிசனத்துக்கு வந்து உட்கார்ந்தவுடன், வேத பாராயணத்துக்கு பின், அனைவரும் தியானம் செய்வது வழக்கம். ஒரு ஸமயத்தில் ஒரு பக்தர் அங்கு வந்திருந்தார். அவர் ராமாயணம், பாகவதம் போன்ற க்ரந்தங்களை பாராயணம் செய்யும் வழக்கம் உடையவர். அவர் காலையில், அந்த க்ரந்தங்களை பகவானின் முன் சிரத்தையாக உரக்க வாசிக்க

ஆரம்பித்து விடுவார். இதை ரமண மஹரிஷிகள் பார்த்து, கேட்டுக் கொண்டிருந்தார். ஏதும் சொல்லவில்லை.

தியானம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு இது சற்றே இடைஞ்சலாக இருந்தது, இருந்தாலும் பகவானே கேட்டுக் கொண்டிருப்பதால், அது குறித்து நாம் ஏதும் அபிப்ராயம் சொல்லலாகாது என்று பேசாமலிருந்து விட்டனர். இப்படியே இந்த பாராயணம் மூன்று நாட்கள் நடந்தது. 5வது நாள் வரை பாராயணம் தொடர்ந்தது. 6வது நாள் அவர் பாராயணத்தை முடித்தவுடன், புஸ்தகத்தை மூடி, சற்றே கண் மூடி, தியானத்தில் ஆழ்ந்தார். பகவான் அதைப் பார்த்து, சற்றே புன்முறுவலுடன், ''இவரும் நம் போல் ஆகிவிட்டார்'' என்று கூறினார். வாயை திறந்து உபதேசிக்காமலேயே உபதேசம் செய்துவிட்டார்.

'சொல்லாது சொல்லி நீ சொல்லற நில்' - சொல்லற நில் என்பதற்கு மனோ மௌனத்தை கடைபிடிக்கவேண்டும் என்று அர்த்தம். எந்த ஸ்திதியை அநுபூதிக்கு முன் பேச்சினால் வர்ணிக்க இயலாதோ, அந்த ஸ்திதியை அடைந்ததற்கு பின்னும், பேசி யாருக்கும் புரிய வைக்க இயலாது. ஆதலால் பேச்சு என்பது அநுபூதிக்கு முன்னரும் தேவை இல்லை. பின்னரும் தேவை இல்லை.

சரி. இப்படி உபதேசம் செய்த அருணாசலேஶ்வரர், எப்படி இருந்தார் என்றால், ''சும்மாவிருந்தாய் அருணாசலா'', பகவானை திருச்சுழியிலிருந்து ஆகர்ஷித்த பின்னர் உபதேசமும் தானாகவே நடந்தது. உத்தம குருவிடம் இருக்கும் சிஷ்யனுக்கு இப்படிதான் நடக்கும். அவரிடம் ஶரணாகதி செய்த பின்னர், சிஷ்யனுக்கு தேவையானது எல்லாம் தானாகவே நடந்துவிடும். அது மட்டுமில்லை. சிஷ்யனுக்கான எல்லாவற்றையும் குருவானவரே செய்துவிடுவார். குருதான் இத்தனையும் நடத்தி கொடுத்தார் என்று கூட சிஷ்யனுக்கு தெரியாது. அப்படி செய்துவிடுவார்.

பகவானுக்கு 'சொல்லற நில்' என்று உபதேசம் செய்த அருணாசலேஶ்வரன், அந்த ஸ்திதியிலேயே இருந்து, வாயாலே சொல்லாமல், சும்மா இருந்தே, உபதேசம் செய்துவிட்டு போய் விட்டான் என்கிறார்.

(தொடரும்)

# ஸதாஶிவ ப்ரும்மேந்த்ராள் - 1

நமது பாரதமாதா எண்ணற்ற தவப்புதல்வர்களை ஈன்றிருக்கிறாள். இத்தகைய ஸாதுக்களான மஹான்கள் இருக்கும் வரை உலகத்திற்கு எந்த வகையிலும் குறை என்பதே இராது. பகவானின் புராணங்களைக் காட்டிலும், ஸாதுக்களான பக்தர்களுடையதும், ஞானிகளுடையதுமான சரித்திரம் பரமபவித்ரமானது. பகவானின் குணங்களைவிட உத்தம பக்தர்களின் குணங்களே மேலோங்கி இருக்கிறது. ஆதலால் பக்தர்களின் குணங்களை ஸ்மரிப்பதே பகவானின் குணங்களை ஸ்மரிப்பதைக் காட்டிலும் உயர்ந்தது ஆகும்.

பகவானின் எந்த அவதாரத்திலும், அவனுக்கு துஷ்ட நிக்ரஹம் என்பது ஒரு காரியமாக இருப்பதினால், பகவான் கோபத்தையோ, வெறுப்பையோ காண்பிப்பது அவசியமாகி விடுகிறது. ஸாதுக்களான பக்தர்களுக்கோ, 'பகவானின் பஜனம்' என்பதே வாழ்வின் குறிக்கோளாகி விடுகிறபடியால், இவர்கள் பகவானின் ஸ்வரூபமே ஆனாலும் கூட, இவர்கள் வாழ்க்கையில் 'துஷ்ட நிக்ரஹம்' என்பதே இல்லை. இவர்களிடம் வந்த துஷ்டர்கள் கூட பரம பக்தர்களாகி விடுகின்றனர். ஏகநாதர் சரித்திரம் இதைக் காட்டுகிறது அல்லவா?

ஸாதுக்கள் பகவானின் கைகளாக உள்ளனர். ஆதலால், பக்தர்களையோ, ஞானிகளையோ, தரிசிப்பதோ, அவர்களைப் பற்றி நினைப்பதோ, அவர்களின் சரித்ரங்களை படிப்பதோ பகவானின் கைக்குள் அகப்பட்டுக்கொண்டதை ஒக்கும். ஸப்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தாலும் கூட இது கிடைக்காது. தேவலோகத்து அமிர்தத்தை பானம் செய்தாலும், பகவானை நெருங்க முடியாது. தேவலோக அமிர்தத்தை பானம் செய்தால், மறுபிறப்பு இல்லாமலிராது. ஆனால், பக்தர்களின் சரித்ரமான அம்ருதத்தை பருகினாலோ பகவானை நெருங்கிவிடலாம். மறுபிறப்பும் வராது.

ஸாதுக்கள் ஒரு நாட்டில் இல்லை எனில், அது காடுதான். ஆனால், ஒரே ஒரு மஹான் அங்கு வாழ்ந்தாலும் போதும். அங்கு

வாழும் அனைவருக்கும் அவரால் சுபிக்ஷம் ஏற்படும். நாடு முழுக்க பஞ்சம் வந்தாலும்கூட பயப்பட வேண்டியதில்லை. திருஞானசம்பந்தருடையது மற்றும் அப்பருடைய சரித்திரங்கள் இதற்கு உதாரணம்.

பகவான் உத்தம பக்தர்களுக்கு அடிமை என்று கூட சொல்லி விடலாம். காரணம், இவர்கள் ''தூய் மனம் மொழியராய்'' இருப்பதால்தான். சுயநலக்கலப்பு சிறிதும் இல்லாமல், தேவை என்பதே அற்று ஆண்டவனின் திருப்பாதங்களே பற்றுக்கோடாய் வாழும் இவ்வடியவர்கள் நினைத்தால் எதுதான் நடக்காது? துஷ்டர்களையும் ஒரு க்ஷணத்தில் மாற்றக்கூடிய இத்தகைய ஸாதுக்களின் சரித்திரங்களை போற்றி பாதுகாப்பதும், அடிக்கடி ஸ்மரிப்பதும் எல்லோருக்கும், எப்பொழுதும் அவசியம்.

இத்தகைய பெருமை வாய்ந்த மஹான்கள் நிறைந்த நம் பாரதநாட்டில், சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஸ்ரீ ஸதாஶிவ ப்ரும்மேந்திராள் எனும் அடியாரைப் பற்றி பார்ப்போம். ஸ்ரீ ஸதாஶிவ ப்ரும்மேந்திரர் இளம் வயதில் மஹாபண்டிதராயும், மேதாவியுமாய் திகழ்ந்தவர். பின்னாளில் பாகவதத்தில் ஶுகருக்கு ஒத்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். இவரின் பாடல்கள் ஶாஸ்திரத்தின் ஸாரமாகவும், அவரின் அநுபூதியை புரிந்து ரஸிக்க நமக்கு ஒரு பஞ்சாமிர்தம் போலவும் அமைந்திருக்கிறது.

பொதுவாக, தெய்வம் இன்னொரு தெய்வத்தைத் தேடிச் செல்லும். நந்தனார், கூலிக்கு ஆள் வேண்டும் என கேட்டபொழுது, கணபதியையும், பின்னர் நெல் கேட்டபொழுது பூதகணங்களையும் பரமேஶ்வரன் அனுப்பினார். ஆனால், ப்ருந்தாவனத்தில் இருக்கும் கண்ணனைப் பார்க்க செல்ல தனது திருக்குமாரர்களான கணபதியையோ, முருகனையோ அனுப்பவில்லை. தனது பத்னியான பார்வதியையும் அழைத்து செல்லவில்லை. ஸ்வயம் தானே சென்றான். காரணம், ஸர்வலோகத்துக்கும் அதிபதியான பரமேஶ்வரனுக்கும், கண்ணனை நேரில் பார்த்து மகிழவேண்டும் என்ற ஆசை இருந்தது. ப்ருந்தாவனத்தில் கண்ணனை தேடி வந்த பரமேஶ்வரனுக்கு ஆசை அதிகமாகி, தவத்தில் உட்காரும்படி நேர்ந்ததே தவிர, உடனடியாக ஆசை பூர்த்தியாகவில்லை.

''மயிலிறகை அணிந்தவன், கயிலைநாதன் பணிபவன்'' என்று சொல்லக்கூடிய பெருமை வாய்ந்த ஸ்ரீ கண்ணபிரான் ஸாதுக்களிடம் ஓடிப்போய் ஒட்டிக்கொண்டு, அகலாது இருந்து விடுகிறான். நமது ஸ்ரீ ஸதாஶிவ ப்ரும்மேந்த்ராளையும் தேடி வந்திருக்கிறான் கண்ணன். அவருடனேயே இருந்தான் போலும். அவருடைய பாடலில் வரும் வரிகள் இதைச் சொல்கின்றன. இனி சரித்திரத்திற்கு வருவோம்.

ஸோமஸுந்தர பெருமான் ஆட்சிபுரியும் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரை மாநகரிலே ஸ்ரீ ஸோமஸுந்தர தீக்ஷிதர் என்னும் ப்ராஹ்மணோத்தமர், பெயருக்கேற்றபடி அமைந்த 'பார்வதியம்மாள்' எனும் உத்தமமான ஸஹதர்மினியுடன் ஶாஸ்திரம் வழுவாது, மிகவும் உயர்ந்த முறையில் க்ருஹஸ்தாஶ்ரமத்தை நடத்தி வந்தார். அந்த தம்பதிகளுக்கு, ஆர்யாம்பாளுக்கு ஶங்கரர் பிறந்தது போல், பரமேஶ்வரனுக்கு முருகன் பிறந்தது போல், தான் வாழ்ந்து வந்த வானுலகை நீத்து, மண்ணுலகம் உய்ய வேண்டி தென்திரு தமிழ்நாட்டில் பார்வதியம்மாளுக்கு மகனாக ஸ்ரீ ஸதாஶிவ ப்ரும்மேந்திராள் அவதரித்தார்.

இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சிவராமக்ருஷ்ணன் ஆகும். குழந்தை என்றாலே பெற்றோருக்கு இஷ்டம்தான். இந்தக் குழந்தை ஸகல ஜீவர்களின் உள்ளிருக்கும் ஈஶ்வரனின் அம்ஶமாய் இருப்பதால், பெற்றோருக்கு அக்குழந்தையிடம் மிகவும் அன்பு பிறந்தது. சீராட்டி, பாலூட்டி வளர்த்தனர். ஸோமஸுந்தர தீக்ஷிதர் இதற்கு என்ன புண்ணியம் செய்தார் என்று தெரியவில்லை. பல ஜன்மங்களில் தவமிருந்தார் போலும்!

சிவராமக்ருஷ்ணன் சிறுவயதிலேயே மிக சுட்டியாகவும், மேதாவியாகவும் இருந்தான். அவனுக்கு தனது குலமுறைப்படி உபநயனம் செய்வித்து, ப்ரும்மோபதேசமும் செய்து வைத்தார். தந்தையே ஶாஸ்திர பாடங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்ததால், அவரே தனயனுக்கு பாடங்கள் சொல்லிக்கொடுத்தார். அது மட்டுமின்றி ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் மஹாபாரதம் போன்ற பகவத் காவியங்களையும் போதித்து வந்தார். சிவராமக்ருஷ்ணன் இதை எல்லாம் ஆசையுடனும், சுலபமாகவும் கற்றுக்கொண்டான்.

(தொடரும்)

# மஹாபாரத கதைகள்

**— நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

தமயந்தி நளனைப் பார்த்து உரிமையுடன் சொல்லத் தொடங்கினாள். ''அரசே? நீரே எனது பதி. என் மனதில் வேறு எவருக்கும் இடமில்லை. என்று அன்னம் உங்களைப் பற்றி வந்து சொல்லிச் சென்றதோ, அன்றிலிருந்து இந்த உறுதியானது என்னை விட்டு நீங்கவில்லை. நீங்கவும் நீங்காது. நீர் என்னை ஏற்க மறுத்தால், நான் உயிரை மாய்த்துக்கொள்வேன்'' என்றாள்.

நளன் அதற்கு பதிலாக நண்பன் போல தமயந்திக்கு அறிவுரை கூறினான். ''பிரியமானவளே? நான் உனக்கு ஹிதத்தை சொல்வேன். கேள்! அமிருதம் இருக்கும்பொழுது யாராவது கூழுக்கு ஆசைப்படுவரோ? தேவர்களிருக்கையில் மனிதனை யாராவது வரிக்க நினைப்பரோ? அக்னியைப் போல் பௌருஷம் பொருந்திய தேவனை பார்க்கவும் முடியுமா? அக்னியால் ஆகாதது என்ன? அல்லது தர்மராஜாவும், மஹாத்மாவும், ஜனங்களை நல்வழியில் ப்ரவர்த்திப்பவருமான யமனை அடை அல்லது தேவலோக ராஜாவும், ஸாதுக்களுக்கு மித்திரனும், அஸுரர்களுக்கு யமனுமான இந்திரனை அடை அல்லது லோகபாலர்களில் ஒருவரான வருணனை அடைந்து போகங்களை அனுபவிக்கலாம். இவர்களை மறுத்து, நீ என்னை வரிப்பாயானால் துக்கமடைவாய். யோசித்து பதில் சொல்'' என்றான்.

தமயந்தி மறுமொழி கூறினாள், ''நளமஹராஜ! ஆதித்ய பகவான் மேற்கில் உதித்தாலும் உதிக்கலாம். என் மனது மாறாது. நீரே என் பர்த்தா'' என்று உறுதியாக கூறினாள். நளன் அவளை நோக்கி, ''உனது மொழி எனக்கு ஸந்தோஷத்தை அளிக்கிறது. இருந்தாலும் நான் தேவர்களுக்காக தூது வந்து, எனது ப்ரயோஜனத்தை ஸம்பாதித்துகொள்ள விரும்பவில்லை. ஆதலால் இந்த தர்மசங்கடத்திலிருந்து நான் விடுபடும் வழியை தேடு'' என்றான்.

தமயந்தி பின்னர் நன்கு ஆலோசித்து நளனிடம் தனது முடிவை வெளியிட்டாள். ''நரேந்திர! என்னுடைய ஸ்வயம்வரத்திற்கு உன்னுடன் அந்த லோகபாலர்களும் வரட்டும். அவர்கள் முன்னிலையிலேயே நான் உம்மை வரிப்பேன். இதனால் உமக்கு தோஷம் வராது'' என்றாள். நளன் புன்சிரிப்புடன் அங்கிருந்து அதன்பின் அகன்றான்.

அரண்மனைக்கு வெளியில் நளனுக்காக காத்திருந்த தேவர்கள் நளனைக் கண்டவுடன், ''தமயந்தி என்ன சொன்னாள்'' என்று வினவினர். நளனும் தான் யாரும் பாராத வகையில் அந்தப்புரத்திற்குள் நுழைய முடிந்ததும், பின்னர் தமயந்தியுடன் ஸம்பாஷித்ததும், தமயந்தி சொன்ன முடிவையும் இந்திரன் முதலான தேவர்களிடம் சொன்னான்.

(தொடரும்)

With best compliments from

Saraswathi Engineering Company

21, Kamaraj 3rd Street, Srinivasa Nagar,
Padi, Chennai - 600 050
✆ 6357139

(Manufacturers of Special Purpose Machines,
Equipments & Machining of Heavy Components in VTL)

With best compliments from

**JSA FORWAARDERS**

81, Thambu Chetty Street, Chennai - 600 001
✆ 5240345/5240347, Fax : 5227277

# செய்திகள்

### அக்டோபர் 30-ந் தேதி முதல் நவம்பர் 4-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி உத்ஸவத்தை ஒட்டி, ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் வர்தந்தி ட்ரஸ்ட் ஸார்பில் யஜுர்வேத க்ரம பாராயணம் நடைபெற்றது. தினமும் காலை, மாலை, இரவு வேளைகளில் வேத பாராயணம் நடைபெற்றது. பூர்த்தி நாளான நவம்பர் 4-ந் தேதியன்று வேத பாராயணத்தில் கலந்துகொண்டவர்களுக்கு ஸம்பாவணை கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

### நவம்பர் 7-ந் தேதி - ஏகாதஸீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஏகாதஸீ பஜனை நடைபெற்றது.

### நவம்பர் 8-ந் தேதி - ப்ருந்தாவன த்வாதஸீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலை 5 மணியளவில் துளஸீ கல்யாணம் நடைபெற்றது.

### நவம்பர் 11, 12 தேதிகள்

பெங்களூர், ஸ்ரீ ஸீதாராம் மந்திரத்தில் நடைபெற்ற ராதாகல்யாணத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

### நவம்பர் 15-ந் தேதி

சீர்காழி அருகில் உள்ள திருநாங்கூர் செம்பொன்செய் அரங்கர் கோவில் மஹாஸம்ப்ரோக்ஷணம் நம் ஸ்வாமிகள் ப்ரேரணையில் சிறப்பாக நடைபெற்றது.

### நவம்பர் 16-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள், சீர்காழியில் திருஞானஸம்பந்தர் அவதார தலத்தில் அமைந்துள்ள ஆகம பாடசாலைக்கு விஜயம் செய்து அங்கு அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள். பிறகு சீர்காழியின் தென்பாதியில் அமைந்துள்ள ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட இருக்கும் பிள்ளையார் கோவிலிற்குச் சென்றார்கள். அன்று கதிர்காமஸ்வாமி அதிஷ்டானத்திற்கும் சென்றார்கள்.

### நவம்பர் 18-ந் தேதி

சென்னை மயிலாப்பூர், வாரன்ரோடு ஸ்ரீ ஸுந்தர் பரத்வாஜ் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற திவ்யநாம பஜனையில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

### நவம்பர் 26-ந் தேதி

மதுரை ஸ்ரீ நம்பி ராமானுஜம் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற ராதாகல்யாணத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### அக்டோபர் 27-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி உத்ஸவம் ஆஸ்திரேலியா சிட்னியில் உள்ள ரவி அவர்களின் க்ருஹத்தில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

பிறகு இரவு 7 மணி முதல் 9½ மணி வரை ஆஸ்திரேலியா ராஜகோபாலன் அவர்கள் க்ருஹத்தில் ஜயந்தி உத்ஸவ நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

*With best compliments from*

**SREE SHABARI FABRICATION**

48, Balaji Nagar,
(Opp. Brakes India)
Padi, Chennai - 600 050
✆ 625 4757, Pager : 9610-109384
e-mail : sabhari@md4.vsnl.net.in

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**டிசம்பர் 8-ந் தேதி - கைஶிக த்வாதஶீ**

திருமழிசை ஸ்ரீ ஜகந்நாத பெருமாளுக்கு நமது மிஷன் ஸார்பில் கட்டளை நடைபெறும்.

**டிசம்பர் 10-ந் தேதி - விஷ்ணுதீபம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் விஷ்ணுதீபம் ஏற்றப்படும்.

**டிசம்பர் 16-ந் தேதி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் தனுர்மாத பூஜை ஆரம்பம். தனுர்மாத முப்பது நாட்களும், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்சனமும், திருவாரதனமும் நடைபெறும்.

**டிசம்பர் 16-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை**

சென்னை ப்ரேமிகபவனத்தில் மணி மண்டபத்தில் அத்யயன உத்ஸவம் நடைபெறும்.

**ஜனவரி - 6ந் தேதி வைகுண்ட ஏகாதஶீ**

சென்னை ப்ரேமிகபவனத்தில் பரமபதவாசல் திறப்பும், கருடஸேவையும் நடைபெறும்.

**மங்களானி பவந்து**

| | |
|---|---|
| முன் அட்டைப்படம் (உள்ளே) | : ஸமீபத்தில் நடைபெற்ற திருநாங்கூர் செம்பொன்அரங்கர் ஸம்ப்ரோக்ஷ தினத்தன்று அலங்கரிக்கப்பட்ட தாயார் விமானம். |
| பின் அட்டைப்படம் (உள்ளே) | : செம்பொன்அரங்கர் திவ்யதேச ஸம்ப்ரோக்ஷண கைங்கர்யத்தை ஏகதேசமாக செய்த ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களுக்கு செம்பொன்அரங்கர் கோவில் சார்பில் மரியாதை செய்யப்படுகிறது. |

*Pranams to the Lotus feet of Guruje*

**INTEROCEAN SHIPPING AGENCY**

123, Angappa Naicken Street,
Third Floor, 'HUSAINA MANZIL'
Chennai - 600 001.

Phone : 5342500 / 5340360
Fax : 5340053
Tlx : 41-7482 IOSA IN
E-Mail : inship@.vsnl.com
Website : http/ww.interocean.org.in

Steamer Agents/Chartering Brokers/Trading Agents

Rest on the Lap of Nature

# Hotel
# Kodai International

**KODAIKANAL - 624 101**

Tel : 04542 - 40649 / 40767, www.kodaiinternational.com

EKM : 08577 - 35324
Chennai : 044 - 5357946
Salem : 0427 - 210102
Bangalore : 080 - 2202615

Group Chairman
**Savadi T. Ganapathy Mudaliar**

# ஸ்ரீ அல்லிமாமலராள் ஸமேத ஸ்ரீசெம்பொன்செய் அரங்கர் திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம்

ஸ்ரீ அல்லிமாமலராள் ஸமேத ஸ்ரீ செம்பொன்செய் அரங்கர் திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம் 15-11-2000 அன்று பகவானுடைய க்ருபையால் ஸுபமாக நடைபெற்றது. இது ஸ்ரீ ஸ்வாமிகளின் ப்ரேரணையால் நடத்தப்படும் மூன்றாவது திருக்கோயிலின் ஸம்ப்ரோக்ஷணம் ஆகும். ஸம்ப்ரோக்ஷணத்திற்காக பந்தக்கால், யாகஸாலை நிர்மாணம் போன்றவை நவம்பர் 8-ம் தேதியே தொடங்கப்பட்டன. நவம்பர் 12-ம் தேதி முதல், ஸம்ப்ரோக்ஷணத்தின் பொருட்டு ஹோமங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மொத்தம் ஐந்துகால ஹோமங்கள் செய்யப்பட்டன.

ஸம்ப்ரோக்ஷணத்தின் பொருட்டு வேதம், ஸ்ரீமத் ராமாயணம், விஷ்ணுபுராணம், ஸ்ரீமத் பாகவதம், திவ்யப்ரபந்தம் முதலியவை பாராயணம் செய்யப்பட்டன. ஸாம வேதத்தில் விசேஷமாக கௌதம ஸாகை மற்றும் ஜைமினிஸாகை என்ற இரண்டு ஸாமவேத பிரிவுகளும் பாராயணம் செய்யப்பட்டன. ஸ்ரீ ஸ்வாமிகளின் பாடசாலையில் இருந்து இருவர் ஸாமவேத கௌதமஸாகை பாராயணத்தைச் செய்தனர். மேற்கூறிய நிகழ்ச்சிகளைச் சற்று விரிவாக காண்போம்.

நவம்பர் 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு அனுஜ்ஞையில் தொடங்கி, வாஸ்துஸாந்தி, திக்பந்தனம் முதலியவற்றுடன் ஸம்ப்ரோக்ஷணத்திற்கான பூர்வாங்க ஹோமங்கள் தொடங்கப்பட்டன. வேத பாராயணம் இதிஹாஸ, புராணபடனம், திவ்யப்ரபந்த பாராயணம் முதலியவையும் அன்றே தொடங்கப்பட்டன.

நவம்பர் 13-ந் தேதி காலை 8 மணிக்கு யாகஸாலை முதல்கால பூஜை ஆரம்பிக்கப்பட்டது. பகல் 12 மணிவரை நடந்தது. வேத, இதிஹாஸ, ப்ரபந்தாதி பாராயணங்களும் காலை 8 மணிக்கு

ஆரம்பித்து பகல் 12 மணிவரை நடைபெற்றன. பகல் 12 மணிக்கு பூர்ணாஹுதி நடைபெற்றது. அதற்குப் பிறகு பெருமாள் திருவாராதனம் நடைபெற்று, வேத ப்ரபந்தாதிகள் சாற்றுமறை நடந்தது. சாற்றுமறை முடிந்தவுடன் அனைவருக்கும் தீர்த்த ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டது. ஸ்ரீ ஶடாரியும் ஸாதிக்கப்பட்டது.

இங்கு ஒரு விஶேஷமென்னவென்றால் ஸம்ப்ரோக்ஷணத்திற்காக யாகஶாலையில் ஸ்தாபிக்கப்பட்ட கலஶத்தில் நிரப்பப்பட்ட ஜலம் காவேரியிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். துலாஸ்நானம் (ஐப்பசி) காவேரியில் செய்வது விசேஷமாகும். பெருமாளும் ரங்கனாக இருப்பதால் ஐப்பசியில் நடந்த இந்த ஸம்ப்ரோக்ஷணத்தை துலாஸ்நானமாகவே காவேரி ஜலத்தின் மூலம் செய்துகொண்டான்.

மறுபடியும் இரவு 7 மணிக்கு யாக ஶாலையில் இரண்டாவது கால ஹோமங்கள் ஆரம்பிக்கப்பட்டு இரவு 9.30 மணிக்கு பூர்ணாஹுதியுடன் முடிவடைந்தன.

டிசம்பர் 14-ந் தேதி காலை 8 மணிக்கு வழக்கம்போல் மூன்றாவது கால ஹோமங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பகல் 12 மணிக்கு பூர்ணாஹுதியுடன் முடிக்கப்பட்டன. பாராயணங்களும் நடந்துகொண்டிருந்தன. பிறகு ஆராதனம், தீர்த்த ப்ரஸாதங்களுடன் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன. இந்த மூன்றாவது கால ஹோம வேளையில் காலை 11 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் மஹா ஸம்ப்ரோக்ஷணத்திற்காக விஜயம் செய்தார்கள்.

மாலை 5 மணிக்கு உத்ஸவர் விசேஷ திருமஞ்சனம் கண்டருளினார். இரவு 7 மணிக்கு நான்காவது கால ஹோமங்கள் ஆரம்பிக்கப்பட்டு இரவு 9.30 மணிக்கு பூர்ணாஹுதியுடன் முடிவடைந்தன. இரவு பெருமாள் யாகஶாலையிலேயே ஸயனாதிவாஸம் கண்டருளினார். இந்த ஸம்ப்ரோக்ஷணத்தை ஏகதேஶ கைங்கர்யமாக ஏற்றுக்கொண்டிருக்கும் தர்மகல்பதரு திரு. G.K. ராமமூர்த்தி இரவு 7 மணிக்கு வந்தார்கள்.

நவம்பர் 15-ந் தேதி அன்று ஐந்தாவது கால ஹோமங்கள் காலை 6 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டன. காலை 8 மணிக்கு பூர்ணாஹுதி நடந்தது. இந்த ஸமயத்தில் சென்னையிலிருந்து

வந்திருந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸத்ஸங்கத்தவர்கள் ''ஹரே ராம....'' என்று நாமஸங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தனர். ஸம்ப்ரோக்ஷண தினமானதால் வெளியூரிலிருந்து ஜனங்கள் திரளாக வந்திருந்தனர். அனைவரும் எதிர்பார்த்து காத்திருக்க ஸம்ப்ரோக்ஷண ஸமயம் வந்தவுடன் நேரம் காலை 9 மணி பத்து நிமிடம் ஆனபொழுது, பெருமாள், விமான கலஶத்தை ஸம்ப்ரோக்ஷணம் செய்வதைக்காண தானும் புறப்பட்டான்.

பெருமாள் புறப்பட்டவுடன் காவேரி ஜலம் ஸ்தாபிக்கப்பட்ட கலஶத்தை பட்டர் ஶிரஸில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, வேதகோஷங்களும், ப்ரபந்தகோஷங்களும் வானைப் பிளக்க, ஸத்ஸங்கத்தினருடைய நாம பஜனை ஶப்தமும் உயர உயர விமானத்தின் மேல் ஏறினார். திரளான ஜனங்கள் கீழிருந்து பகவானுடைய நாமாவை பலவிதமாகச் சொல்லி கைகூப்பிக் கொண்டிருக்க, நமது ஸ்வாமிகள் பார்த்துக்கொண்டிருக்க, பெருமாள் எழுந்தருளியிருக்க, ஸரியான ஸமயத்தில் பட்டர் கலஶத்திற்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்தார். அதே நேரத்தில் தாயார் ஸன்னிதி விமான கலஶத்திற்கும் ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது.

பிறகு பட்டர் அங்கிருந்தபடியே கலஶ ஜலத்தை அனைவர்மீதும் ப்ரோக்ஷித்தார். புஷ்பங்களைப் போட்டார். அனைத்து பக்தர்களும் மிகுந்த ஆர்வத்துடன் ப்ரஸாதங்களை ஸ்வீகரித்துக்கொண்டனர். பிறகு பெருமாள் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளினார். பெருமாள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினார். பெருமாள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளியவுடன் வேத ப்ரபந்த சாற்றுமறை நடந்தது. பாராயணத்திற்கு வந்திருந்த அனைத்து பாகவதாளும் ஶப்தமாக சொல்ல பகவான் ஆனந்தமாக கேட்டருளினான். சாற்றுமறை முடிந்தவுடன் அனைவருக்கும் தீர்த்தப்ரஸாதம், ஸ்ரீ ஶடாரி முதலியவை அருளப்பட்டன.

பிறகு பகல் 12.00 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ப்ரேரணையால் தர்மகல்பதரு கூடலூர் திரு. K. ராமமூர்த்தி அவர்கள் அனைவருக்கும் ஸம்பாவணை செய்தார். முதலில் ட்ரஸ்டிகளுக்கும், பிறகு தாயார் ஸன்னிதி, பெருமாள் ஸன்னிதி விமானம்

முதலியவற்றைக்கட்டிய ஸ்தபதிக்கும் பிறகு அர்ச்சகர், தீர்த்தக்காராள், பாகவதாள் அனைவருக்கும் ஸம்பாவணை செய்யப்பட்டது.

பிறகு செம்பொன்செய்கோயில் நிர்வாகிகள் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு பரிவட்டம்கட்டி ஸாமந்தி, வ்ருக்ஷி, மரிக்கொழுந்து முதலியவற்றால் கட்டப்பட்ட பெரியமாலையை சாத்தி மரியாதை செய்தனர். பிறகு தர்மகல்பதரு திரு. G.K. ராமமூர்த்தி அவர்களுக்கும் பரிவட்டம் கட்டி மாலை ஸாத்தி மரியாதை செய்தனர். பிறகு செம்பொன் செய்கோயில் பட்டாச்சாரியார் திரு. ரமணீ பட்டாச்சாரியார் மாலை, குடை முதலிய மரியாதைகளுடன் பாகவதாள் புடைசூழ அவருடைய க்ருஹத்தில் கொண்டுவிடப்பட்டார். ஸ்ரீ ஸ்வாமிகளும் இதில் கலந்து கொண்டார்கள்.

ஸம்ப்ரோக்ஷண தினத்தன்று இரவு 7.30 மணிக்கு பெருமாள் கருட வாஹனத்தில் புறப்பாடு கண்டருளினார். புறப்பாட்டின்பொழுது ப்ரபந்த பாராயண கோஷ்டியினர் முன் செல்ல, பெருமாளுக்கு பின்னே வேத கோஷ்டியினர் செல்ல புறப்பாடு மிகவும் அழகாக இருந்தது. இந்த உத்ஸாஹமான வேளையில் பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்ந்தனர். நித்யம் பட்டாசுகள் வெடிக்கப்பட்டாலும் புறப்பாட்டின்பொழுது விசேஷமாக இருந்தது. பட்டாசுகளின் வெடிச் சத்தம் காதை பிளக்க, ராக்கெட் போன்றவைகளால் வானமே ஒளிமயமாக இருந்தது. அனைவரும் நம்முடைய பகவானுடைய ஒரு உத்ஸவம் என்று ஸந்தோஷமாக புறப்பாட்டில் கலந்துகொண்டனர். இப்படி மிகுந்த உத்ஸாஹத்துடன் நடந்த புறப்பாடு இரவு 9.30 மணிக்கு மாடவீதி ப்ரதக்ஷிணத்துடன் முடிவடைந்தது. இப்படியாக அல்லிமாமலராள் ஸமேத ஸ்ரீசெம்பொன்செய் அரங்கனுடைய கோயில் ஸம்ப்ரோக்ஷணம் இனிதாக நடைபெற்றது.

**விசேஷங்கள் :**

ஸம்ப்ரோக்ஷண தினத்தன்று காலையில் மழை மிகவும் கடுமையாக பெய்தது. அனைவரும் ஸம்ப்ரோக்ஷணம் எப்படி ஸுலபமாக நடக்கும் என்று கவலைப்பட்டு கொண்டிருக்க, திடீரென்று, கொட்டுகிற மழை ஒரு தூறல்கூட இல்லாமல் நின்றுவிட்டது. இது அனைவருக்குமே ஆஶ்சர்யமாக இருந்தது.

மேலும் எந்தவித ஶ்ரமும் இல்லாமல் ஸம்ப்ரோக்ஷணம் ஸுலபமாக நடந்தது.

இந்தக் கோயில் ஸாக்ஷாத் ஸ்ரீராமபிரானால் செம்பொன்னால் வேயப்பட்ட சிறப்புடையதால், நமது ஸ்வாமிகள் இந்த கோயிலின் கலஶத்தை Gold platedஆக செய்யச் சொல்ல அப்படியே செய்யப்பட்டதாகும். இந்த ஸம்ப்ரோக்ஷண ஸமயத்தில் அந்த ஊர் local நாளிதழ்களெல்லாம் ஸம்ப்ரோக்ஷணத்தை விரிவாக வெளியிட்டன. 'தினமலர்' என்கிற நாளிதழ் ஸம்ப்ரோக்ஷணத்திற்காக Special-ஆக ஒரு ஸப்ளிமென்டரியை வெளியிட்டது. அவர்கள் நமது ஸ்வாமிகளிடம் முதல் ப்ரதியை தந்தனர்.

ஸம்ப்ரோக்ஷணத்தை முன்னிட்டு பெருமாளுக்கு வெள்ளி மற்றும் தங்கத்தாலான சாளக்ராமமாலை தங்கக்கிரீடம் மற்றும் பட்டு வஸ்த்ரங்களை திரு. N.C. ஸ்ரீதர் அவர்கள் ஸமர்ப்பித்தார்.

இப்படியாக செம்பொன் அரங்கர் திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணத்தை தரிசித்து அனைவரும் தங்கள் தங்கள் க்ருஹங்களுக்குச் சென்றனர்.

**- பாலாஜி**

---


ஸ்ரீ ஹரி:

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-83.

## அறிவிப்பு

நமது மிஷன் சார்பில் ஜுலை '95 முதல் ''மதுரமுரளி'' தெய்வீக மாதப் பத்திரிகை வெளிவருகின்றது. இதில் அனைவரும் சந்தாதாரர்களாக சேர்ந்து பயனடைய கேட்டுக்கொள்கின்றோம்.

தனிப்ரதி ரூ.5/-

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

# திருக்காவளம்பாடி -

**ஸ்ரீ மடவரல்மங்கை தாயார்**
**ஸமேத ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி**
**திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம்**

இந்த கோயிலின் பெருமாளுடைய திருநாமம் ராஜகோபாலஸ்வாமி என்பதாகும். பெருமாள், ருக்மிணி ஸத்யபாமாவுடன் ஸேவை ஸாதிக்கிறார். இந்த கோயில் புஷ்கரிணியின் பெயர் 'தடமலர் பொய்கை'.

ஒரு ஸமயம், ஸ்ரீ நாரதர் பகவான் க்ருஷ்ணனிடம் தேவலோகத்து புஷ்பமான பாரிஜாதத்தைக் கொடுத்தார். க்ருஷ்ணன் அதை ருக்மிணிக்குக் கொடுத்தார். இந்த விஷயத்தை நாரதர் ஸத்யபாமாவிடம் கூறிவிட்டார். அதனால் கோபம் கொண்ட பாமா கண்ணன் வரும்பொழுது கதவை சாத்திவிட்டாள். ஸ்ரீ க்ருஷ்ணன் எவ்வளவு ஸமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. கடைசியில் தேவலோகத்திலிருந்து பாரிஜாதத்தைக் கொண்டு வந்து தருகிறேன் என்று கூறி ஒரு விதமாக ஸமாதானப்படுத்தினான்.

பிறகு ஒரு ஸமயம், இந்த்ரனுடைய கோரிக்கையினால் க்ருஷ்ணன் நரகாசுரனுடன் போரிட்டான். அந்த சண்டையில் ஸத்யபாமா, க்ருஷ்ணனுக்கு ஸாரத்யம் செய்தாள். க்ருஷ்ணனுடைய கருடக் கொடியுள்ள தேரை மிகவும் அழகாக அதே ஸமயத்தில் ஜாக்ரதையாகவும் யுத்தகளத்தில் ஓட்டினாள். முடிவில் க்ருஷ்ணன் நரகாசுரனை வதம் செய்து, அவனால் அடைத்து வைக்கப்பட்டிருந்த 16100 கன்னிகைகளையும் மீட்டு அவர்கள் மனத்தினால் செய்த ப்ரார்த்தனைக்கேற்ப அவர்கள் அனைவரையும் மணந்துகொண்டான்.

பிறகு நரகாசுரனுடைய புத்ரனான பகதத்தனை அரசனாக்கினான். பிறகு நரகாசுரனால் பிடுங்கிக்கொள்ளப்பட்ட அதிதிதேவியின் குண்டலத்தையும், இந்த்ரனுடைய வெண்குடை, மணிபர்வதம் முதலியவற்றையும் எடுத்துக்கொண்டு ஸத்யபாமாவுடன் தேவலோகம் சென்று இந்த்ரனிடம் அவைகளைக் கொடுத்துவிட்டான்.

க்ருஷ்ணன், இந்த்ரனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அங்கேயே ஸத்யபாமாவுடன் சிறிது காலம் தங்கியிருந்தார். அப்பொழுது இந்த்ராணீ பாரிஜாதத்தை பூலோக பெண்கள் சூட்டிக் கொள்ளக்கூடாது என்று கூறி ஸத்யபாமாவிற்கு பாரிஜாதத்தைத் தர மறுத்துவிட்டாள். இதனால் மிகவும் வருத்தமடைந்த பாமா அழுதுகொண்டிருந்தாள். க்ருஷ்ணன் அவளை ஸமாதானம் செய்தான். பிறகு ஸத்யபாமாவுடைய தூண்டுதலால் பாரிஜாத மரத்தை வேரோடு பிடுங்கி த்வாரகைக்குக் கொண்டு செல்ல யத்தனித்தான். இதையறிந்த இந்த்ராணீ இந்த்ரனிடம் முறையிட்டாள்.

இந்த்ரன் வந்து க்ருஷ்ணனைத் தடுத்தான். அதனால் க்ருஷ்ணனுக்கும் இந்த்ரனுக்கும் பெரிய சண்டை நடந்தது. இந்த்ரன் பகவானிடம் தோற்றான். அப்பொழுது அதிதிதேவி அவ்விடம் வந்து க்ருஷ்ணனை ஸமாதானப்படுத்தினாள். இந்த்ரனும் பாரிஜாத வ்ருக்ஷத்தைக் க்ருஷ்ணனுக்கு கொடுத்துவிட்டான்.

க்ருஷ்ணனும் அந்த பாரிஜாத வ்ருக்ஷத்தை ஸத்யபாமாவிடம் கொடுத்த வாக்கின்படி அவளுடைய க்ருஹத்திலேயே கொல்லைப்புறத்தில் நட்டான். ருக்மிணிக்கும், ஸத்யபாமாவிற்கும் பாரிஜாத புஷ்ப விஷயமாக அடிக்கடி சண்டை நடக்கும். முடிவில் நாரதர் அவர்களுக்குள் ஸமாதானத்தை ஏற்படுத்தினார்.

பாரிஜாதத்தை க்ருஷ்ணனிடம் அளித்தபிறகு இந்த்ரன், பாரிஜாதத்திற்காக க்ருஷ்ணனிடம் சண்டையிட்டோமே என்று வருந்தி அந்த அபசாரத்திற்குப் பரிகாரம் செய்ய நினைத்தான். அதனால், பூலோகம் வந்து ஒரு நந்தவனத்தை அமைத்தான். அந்த நந்தவனத்தில் மந்தாரம், பாரிஜாதம், கல்பகம் போன்ற தேவலோகத்து புஷ்பவ்ருக்ஷங்களை வைத்து அழகுபடுத்தினான். பிறகு அந்த நந்தவனத்தின் நடுவில் ஒரு கோவில்கட்டி தன்னுடைய ப்ரியமூர்த்தியான ஸ்ரீ கோபாலனை ப்ரதிஷ்டை செய்து பூஜித்தான். பகவானை நினைத்து பக்தியுடன் கைகூப்பித் துதித்தான். கோவர்தனோத்தாரத்தினால் கர்வபங்கப்பட்டும், மறுபடியும் பாரிஜாத விஷயமாக சண்டையிட்டதை க்ஷமிக்கும்படி ப்ரார்த்தித்தான்.

இப்படி மறுபடியும் மறுபடியும் அபசாரப்படாமல் இருக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தான். ருக்மிணி ஸத்யபாமாபதியாக ஸ்ரீ கோபாலனும் அவனுக்கு ப்ரத்யக்ஷமாக ஸேவை ஸாதித்து அவனை ஸமாதானப்படுத்தினான்.

இந்த்ரனால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நந்தவனமே காவளம்பாடியாகும். இந்த காவளம்பாடியில் இன்றும் ருக்மிணி ஸத்யபாமா ஸஹிதனாக ராஜகோபாலனான ஸ்ரீ க்ருஷ்ணன் பக்தர்களுக்கு ஸேவை தருகிறான். இந்த க்ருஷ்ணனை ஸேவிப்பவர்கள் இந்த பூலோகத்திலேயே இந்த்ரஸாம்ராஜ்யத்தை அனுபவிப்பார்கள்.

திருமங்கை ஆழ்வாரும் இந்த ஸ்தலத்துப் பெருமாளை மங்களாஸாஸநம் செய்யும்பொழுது

*''ஏவு இளங்கன்னிக்காகி இமையவர்கோனைச் செற்று*
*காவளம் கடிதிறுத்துக் கற்பகம் கொண்டு போந்தாய்*
*பூவளம் பொழில்கள் சூழ்ந்த புரந்தரன் செய்த நாங்கைக்*
*காவளம்பாடி மேய கண்ணனே! களைகண் நீயே!''*

என்று பகவான் ஸத்யபாமாவிற்காக பாரிஜாதத்தின் பொருட்டு இந்த்ரனுடன் சண்டையிட்டு அவனை ஜயித்ததையும் பிறகு இந்த்ரனால் இந்த நந்தவனம் நிறுவப்பட்டதையும் ஸ்மரிக்கிறார்.


**- பாலாஜி**

---

**அறிவிப்பு**

ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனைகள், "The Greatness of Bhagavan" ப்ரவசனம் CD வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் விலை ரூபாய் 100/-. இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.

முன் அட்டைப்படம் : (வெளியே) செம்பொன்அரங்கர் தாயாருடன் ஸேவை ஸாதிக்கிறார்.



ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 6 | டிசம்பர் 2000 | கானம் : 5